# ஆசிரை

**அன்பின் வாசக நெஞ்சங்களே!**

கோடைகால விடுமுறை முடிவடைந்து பாடசாலைகள் புதிய ஆண்டை ஆரம்பிக்கும் இவ் வேளையில், மீண்டும் ஒரு புதிய கல்விஆண்டில் மாணவர்களையும், கல்வி புலத்தில் பணிபுரியும் அனைவரையும் சந்திப்பதில் மகிழ்வடைகின்றேன். புதிய கல்வி ஆண்டில் சிறப்பான செயற்பாடுகளை செய்யவும், முன்னேற்றத்தின் படிகளாக இவ்வாண்டு அமையவும், இறைவனை நோக்கி வேண்டி நிற்கின்றேன். நாம் வாழும் உலகில் பல செயற்பாடுகளை செய்யவும் நாளாந்தம் பலமுயற்சிகள் நாம் செய்கின்றோம். எங்களுடைய ஒவ்வொரு செயற்பாடுகளும் இறைவனை நோக்கியதாகவே இருக்கவேண்டும். எமது வாழ்வு ஆன்மீகம் வேறு என்று பிரித்துவிட முடியாது. எமது உள்ளத்தில் நாம் தூய்மையானதை எப்பொழும் என்னும் பொழுது அந்த உள்ளத்திலிருந்து பிறக்கும் வாழ்வு தூய்மையானதாகவே இருக்கும். எமது உள்ளம் தூய்மையானது என்பது பற்றி நாம் இந்த சிந்தனை துளிகளில் சிந்திக்க அழைக்கப்படுகின்றோம். மரியாவின் உள்ளம் எந்த வேளையிலும் தூய்மையாகத்தான் இருந்தது. மரியாள் தனது வாழ்க்கையில் என்னத்தை செய்தாலும் அது தூய்மையானதாகவே இருந்தது. அவருடைய நோக்கம் தூய்மையானதாக இருந்தபடியால் அவளுடைய சொல், செயல் முழுக்க தூய்மையானதாகவே இருந்தது. முக்கியமாக மரியாளுடைய எண்ணத்திலே இளையோடிக் கொண்டிருந்த எண்ணம் இறைவன் என்னை தூய்மையானதாகப் படைத்தார். மீண்டும் நான் தூய்மையாக இருக்க வேண்டுமென்றும், தூய்மையாகவே இறைவனிடம் செல்ல வேண்டுமென்றும் முழு மூச்சாகநின்றாள். குறிப்பாக இறைவார்த்தைதான் முழுக்க முழுக்க வாழிகாட்டியாக இருந்தது. நாமும் இறைவார்த்தையை வாசிக்கவும், அதை நாளாந்தம் தியானிக்கவும், அதை எமது வாழ்வாக்கிக் கொள்ளவும் அழைக்கப்படுகின்றோம். எப்பொழுதும் இறைவார்த்தையில் எமது வாழ்வானது கட்டப்படுமாயின் அது என்றென்றைக்கும் நிலைத்துநிற்கும். எமது உள்ளமும் தூய்மையாகும். இறைவார்த்தைக்கு தூய்மையாக்கும் சக்தியும், வல்லமையும் உண்டு இறைவார்த்தையை நாம் ஒவ்வொரு நாளும் வாசிக்கும் பொழுது மீட்கும் சக்தியும், (Salvific power) தூய்மையாக்கும் வல்வமையும் எமதுஉள்ளத்தில் இடம்பெறும். ஆகவே ஒவ்வொரு நாளும் இறைவார்த்தையை வாசிப்போம். அதிலிருந்து சக்தியை பெற்றுக்கொள்வோம், தூய மனிதர்களாக வாழ்வோம்.

**நன்றி**

**அன்புடன்,**

**அருட்பணி யூட் நிக்ஸன்**

**Parish Priest , Our Lady of Deliverance Tamil Catholic Mission**

**Montreal (QC), Canada.**